## SOLEMN BLESSING OF

# HOLY ROSARY CHURCH

## RAGALA




## இராகலை

## பரிசுத்த ஜெபமாலை மாதா ஆலயம்

# திறப்பு விழா சிறப்பு மலர்

## 2014-10-04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

இராகலை பரிசுத்த
ஜெபமாலை மாதா ஆலயத்தை
புனர் நிர்மாணம் செய்ய
வழிசமைத்து வான் வீட்டில்
அமைதிக் கொள்ளும்
பாசமிகு எங்களது
முன்னாள் பங்குந்தந்தை
அருட்தந்தை
பேசிலால் ரொட்றிகோ
அடிகளாருக்கு இந்நூலை
சமர்ப்பிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகலை பங்கு ஆலய கட்டிட நிர்மானப்பணிக்கான செபம்



"நான் அவர்கள் நடுவில் தங்குமாறு ஒரு திருதூயகம் அமைக்கப்படட்டும்" என்று கூறிய ஆற்றலின் ஆண்டவரே ! உன் திருமகனை பெற்று வளர்க்கும் தாயாக நீர் தெரிந்து கொண்ட எம் பாதுகாவலியான தேவ தாயின் ஆலய கட்டுமான பணிகளுக்காக உம்மை வேண்டுகின்றோம்.இந்நாள் வரை நீர் புரியும் வியத்தகு செயல்களுக்காக உம்மை போற்றிபுகழ்கின்றோம் .உம்மை ஆராதிக்கின்றோம். இவ்வாலயம் முழுமைப் பெற பொருளுதவி , உடலுதவி நல்கும் , உம் பிள்ளைகள் அனைவரையும் அவர்கள் குடும்பங்களையும் ஆசீர்வதியும்.

இப்புதிய கட்டிடத்தில் பணிப்புரியும் கட்டிட ஊழியர்கள் எல்லோரையும் தூய ஆவியால் வழிநடத்தி ஆசீர்வதித்து பாதுகாப்பு நல்கியருளும். இவ்வாலயம் எம் விசுவாசத்தை வளர்த்து ஒற்றுமையின் சின்னமாக விளங்கச் செய்தருளும். எம் மன்றாட்டுக்களையெல்லாம் எம் அன்னையின் பரிந்துரையோடு தூய ஆவியின் ஐக்கியத்தில் எம் ஆண்டவர் கிறிஸ்து வழியாக மன்றாடுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# The Holy Father Francis

cordially imparts the requested Apostolic Blessing to the

Parish Priest Rev. Fr. Christy Paul and the community

of Holy Rosary Church, Ragala

in the Diocese of Kandy, Sri Lanka


on the occasion of the 60th Anniversary of its foundation

and invokes an abundance of heavenly favours

and the continued protection of the Blessed Virgin Mary

25th May 2014

Ex Aedibus Vaticanis, die 20.3.2014



*Bishop's Office*
*873, Peradeniya Road,*
*Kandy - 20000,*
*Sri Lanka.*

*Tel : (00 94 81) 44 71 601 - 2*
*Fax : (00 94 81) 22 32 792*
*e-mail : bvianney@sltnet.lk.*

## Message for the Souvenir of blessing the new church of Ragala

The news that the new parish Church in Ragala, dedicated to Our Lady of the Rosary, is to be blessed open, gives all of us great joy. It is an event that has been eagerly looked forward to, not only by the parishioners of Ragala, but by all of us in the diocese.

Situated in a scenic setting, overlooking the town of Ragala, the Church is beautifully constructed. I wish to thank all those who collaborated with the Parish priest in getting the final touches done. Our Vicar General, Fr.Milroy Fonseka, has been following up the construction of the new Church from its inception. I wish to thank him very much on this happy occasion. We owe a deep debt of gratitude to all those who rallied round to make their contributions towards the construction of this beautiful Church. Fr. Christy Paul, has spared no pains from the moment he assumed duties as Parish Priest, to ensure that every detail was looked into and in his gentle way, he managed to rally round the parishioners to contribute, to the best of their ability, to complete the work of the new Church. To all of them we congratulations and may God bless you and your families.

I wish to therefore appeal to all our faithful in the parish of Ragala to make the occasion one of grace-filled rededication to their christian commitment. Our Blessed Mother has always been watching over her children over the years.

This being the year of the family, I invite all families of the parish to revive their faith and be fervent in their Christian calling. I therefore, wish the Parish and all the Parishioners God's abundant blessings on this historic occasion and it is my fervent prayer that as Our Blessed Mother's faithful children that you grow in holiness and love of God and one another.

+ Bishop Vianney Fernando
Bishop of Kandy

+ Vianney Fernando

09th September 2-14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Message From:

# Our Vicar General

## Congratulations & Best Wishes with God's Abundance of Blessings

It is my great pleasure and privilege to send this short Message of Greeting on the occasion of the blessing fo the new Parish church, Our Lady of the Holy Rosary, Ragala Parish on the 4th of October 2014. First and foremost I take this Opportunity of thank our Lordship for the Major Financial contribution made to complete the construction of this beautiful church of our Lady, and I thank Rev.Fr.Christy Paul and heartfelt gratitude to late Fr.Percylal Rodrigo for the immense trouble taken for the construction. Rev. Fr, Christy collecting a considerable amount of money for the Construction.

I know for sure, when I see the completed beautiful Parish Church of Ragala, the blessing and guidance of the Blessed Mother has been there all throughout the constructions. Newly Constructed Holy Rosary Church is one of the biggest and beautiful monument that we have offered to Jesus though our loving Mother Mary in our Diocese.

Therefore I congratulate all our parishioners of Ragala Parish all those who have contribute in the parish and even outside. I wish that people my begin to believe that Jesus Christ is the living God. May our loving Mother continue to be present in the beautiful church which is dedicated to her as a loving remembrance for all the sacrifices she made in the plan of salvation of all mankind.

Very Rev.Fr.Milroy Fonseka
Vicar General



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Message From:

# The Vicar Forane Nuwara Eliya Vicariate

I am happy and privileged to present this message of the souvenir of the Holy Rosary Church Ragala Halgranoya to mark the occasion of the inauguration of the newly built parish church. It is easy to start building a new church, but the problem and difficulties arise when the work is in progress. I think in a similar manner the parish priest and the parish community of Ragala faced same situations. And they have successfully completed this Church. My heart filled appreciation and congratulations to the parish priest and the parish community, I wish that this place of worship may bring many blessings to all the parishioners and those who visit the church.

Very Rev.Fr.EdwinRodrigo

Vicar Forane

Nuwara Eliya Vicariate



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது மக்களால் முடியும்

இராகலை பரிசுத்த ஜெபமாலை மாதா ஆலயமானது புதிதாக புணரமைக்கப்பட்டு புதிய பரிணாமங்களுடன் அதன் மீள் நேர்தளிப்பு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் இப்பங்கின் முன்னால் பங்குத்தந்தை என்ற ரீதியில் நான் பேருவகை அடைகின்றேன் இப்புனித நிகழ்வையொட்டி வெளியிடப்படும் நினைவு மலரிற்கு ஆசிச்செய்தி அளிப்பதை பெரும் பாக்கியமாக கருதுகின்றேன். 100 வருட புனித சரித்திரத்தைக் கொண்ட இவ்வாலயமானது 1912 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு 1916 ஆம் ஆண்டு பரிசுத்த ஜெபமாலை அன்னைக்கு அர்ப்பனம் செய்யப்பட்டு நுவரெலியா பங்கின் துணை ஆலயமாக திறந்து வைக்கப்பட்டது. முற்றிலும் பொது நிலையினரின் அயராத பங்களிப்பில் மெருகூட்டப்பட்டு மெல்ல தவழ்ந்து வந்த இவ்வாலயமானது 1953 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 24ம் திகதி தனிப்பங்காக உருவாக்கப்பட்டது.

காலத்தின் தேவைகளை கருத்திற் கொண்டு மக்களின் விசுவாச வாழ்விற்கு உரமூட்டும் பல மீட்புபணி திட்டங்களை காலத்திற்கு காலம் ஒழுங்கு செய்து தன்னை சுற்றி வாழும் பலலின மக்களுக்கு ஒரு தாயாக இருப்பதுதான் இவ்வாலயத்தின் தனிச்சிறப்பாகும்.

நான் இராகலை பங்குத்தந்தையாக (31.08.1989 ஆவணி 1992) இருந்த நாட்களை மறக்கமுடியாது. மக்களின் அன்பும் இளைஞர்களின் விசுவாசத்துடிப்பும் முதியோரின் ஆலோசனைகளும் பல அரிய நிகழ்வுகளை இப்பங்கில் நடத்த துணைபுரிந்தது. மேலும் இப்பங்கின் சகல அப்போஸ்தலிக்க பணிகளும் சிறப்பாக இயங்கி வந்ததை நான் அறிவேன். குறிப்பாக பங்கு பொதுச்சபை மற்றும் மறையாசிரியர்கள் இளைஞர்கள், மரியாயின் சேனை போன்ற அப்போஸ்தலிக்க பணிகளும் பங்குத்தந்தையுடன் இணைந்து இறையரைக் கட்டியெழுப்பியதை நான் பெருமையுடன் திரும்பிப் பார்க்கிறேன். திருவருட்சாதனங்களை (பாவசங்கீர்த்தனம், தேவநற்கருணை, உறுதி பூசுதல் பெறும் பிள்ளைகளுக்குரிய பயிற்சி பாசறைகள் அடிக்கடி இங்கு நடைபெறுவது ஒரு தனி சிறப்பு. எல்லா மக்களும் ஒன்று சேர்ந்து தாமாகவே முன்வந்து சிரமதான பணிகளில் ஈடுபட்டு பிள்ளைகளுக்கு உணவு தயாரித்துக் கொடுத்து பயிற்சி பாசறைகளை நடத்துவதற்கு மறையாசிரியர்களுக்கு உதவி செய்வது ஓர் ஆசீர்வாதமாகும். மேலும் முறைப்படி திருமணம் எனும் அருட்சாதனத்தை பெறுவதற்கு கோயிலில் திருமணமாகாத தம்பதிகளின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு அவர்களுக்குரிய ஆயத்த வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டு பயிற்சி பாசறையூடாக திருமணமெனும் அருட்சாதனம் முறையாக நிறைவேற்றப்படுவது இப்பங்கின் இன்னொரு தனி சிறப்பாகும். இவை அனைத்தும் பொது நிலையினரின் முதிர்ச்சிக்கு நற்சான்றுகளே.

காலம் சென்ற முன்னால் பங்குத்தந்தை பேர்சிலால் ரொட்றிகோ அடிகளாரினால் அடிக்கல் நாட்டப்பட்டு இவ்வாலய பணிகள் ஒரு சில காரணங்களால் ஸ்தம்பிதமடைந்த இவ்வேளையில் இராகலை பங்கின் பங்குத்தந்தை அருட்திரு கிறிஸ்டி போல் அடிகளாரின் தெளிந்த சிந்தனையும், உயரிய நோக்கமும், அனைவரின் கருத்துக்களுக்கு செவிசாய்க்கும் அவரது மனப்பான்மையும் தான் இவ்வாலயமின்று தலை நிமிர்ந்து நிற்பதற்கு வலுவான காரணங்களாகும். பலரின் நன்கொடைகள் உதவிகள் ஆலோசனைகள் முறையாக பெறப்பட்டு மக்கள் பிரமிக்கும் வகையில் இம் மாபெரும் ஆலயத்தை பங்கு மக்களின் முழு ஒத்துழைப்புடன் கட்டியெழுப்பிய பெருமை அருட்திரு கிறிஸ்டிபோல் அடிகளாரைச் சாரும். வெளிநாட்டு உதவிகளையே நம்பி ஆலயங்கள் கட்டப்பட்ட சரித்திரத்தை மாற்றி எமது மக்களால் முடியும் என்ற கருத்தை ஓங்கி உரைக்கச் செய்த பெருமை இவ்வடிகளாரைச் சாரும். எனவே இம்மகிழ்ச்சியான தினத்தில் எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் பங்குத்தந்தைக்கும் பங்கு மக்களுக்கும் கூறி நிற்கின்றேன். இவ்வாலயமானது இன்னும் சிறப்பாக பொது நிலையினரின் பங்களிப்புடன் விசுவாச முதிர்ச்சியுடன் வாழ இறைவனின் ஆசீர்வாதத்தை வேண்டி நிற்கின்றேன்.

அருட்திரு.நேரியோ ஆபிரகாம்
பங்குத்தந்தை, நுவரெலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பங்குதந்தையின் வாழ்த்துச் செய்தி

"என் ஆன்மா ஆண்டவரை ஏற்றி போற்றுகின்றது என் மீட்பராம் கடவுளை நினைத்து களிகூறுகிறது ஏனெனனில் அவர் எனக்கு அரும் பெரும் செயல்கள் பல புரிந்துள்ளார்" (லூக் 1:47). மலையகத்தில் இராகலை நகரில் மிக அழகாக காட்சியளிக்கும் மலைக்குன்றில் 100 வருட பழைமை வாய்ந்த தூய ஜெபமாலை மாதா ஆலயம் புணர் நிர்மாணம் செய்யப்பட்டு ஆசீர்வதிக்கப்படும் இந்நாளில் என் மனதில் உதிக்கும் நல் எண்ணங்கள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை. "அவர்கள் நடுவில் தங்குவதற்கென்று ஒரு திரு தூயகம் அமைக்கப்படட்டும்"

வி.ப : 25) என்ற இறைவாக்குக்கு இணங்க எமது ஆயரின் பணிப்புரையின் பேரில் ஆரம்பித்த இப்பணி நிறைவுறும் இவ்வேளையில் இந்நாள் வரை இறைவன் ஆற்றிவரும் அரும் பெரும் செயல்களை நினைத்து இறை பாதங்களில் நன்றி மலர்களை தூவுகின்றேன். "ஆண்டவர் வீட்டை கட்டவில்லையெனில் கட்டுவோரின் உழைப்பு வீணானது" (தி.பா 127:1) எனவே இந்நாள் வரை பங்கு மக்கள் முழுபங்காக நாம் அனுபவித்த இறைவழி நடத்தல் சொல்லில் அடங்காதவை.

இவ்வழிநடத்தலை வழங்கிய எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி. 33 வருடங்களாக எம் மறைமாவட்டத்தின் மந்தைகளின் தேவை அறிந்து வழி நடத்தி வருகின்ற எம் ஆயர் இராகலை மக்கள் மீது சிறப்பு கவனம் செலுத்தி இவ் ஆலயம் முழுமைப்பெற முழு ஒத்துழைப்பு வழங்கியதை பங்கு மக்கள் ஒருநாளும் மறக்கமாட்டார்கள். பல தடவை விஜயம் செய்து ஆலோசனைகள் வழங்கி வழிநடத்திய எம் மறைமாவட்ட குருமுதல்வர் பேரருட் திரு மில்ரோய் பொன்சேகா அடிகளாரின் பணியையும் மறக்க இயலாது. தூய ஜெபமாலை அன்னை மீது எமது பங்கு மக்கள் கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கையும் பாசமும் அவர்கள் இவ் ஆலயம் முழுமைப் பெற அவர்கள் செய்த தியாகங்கள் மூலம் தெளிவாகிறது. கத்தோலிக்க மக்கள் மட்டுமன்றி பிற இன மத மக்களும் அன்னையின் ஆசி வேண்டி ஆர்வத்தோடு கூடி வருகின்ற இவ் இடம் இன்று மீள் நேர்ந்தளிப்பு செய்யப்படுவதையிட்டு பெருமையடைகின்றேன். இப்படிப்பட்ட பங்கில் அன்னைக்கு ஒரு ஆலயம் அமைக்க சந்தர்ப்பம் கிடைத்தமை இறைவன் தந்த பாக்கியம் என கருதுகின்றேன். இவ் ஆலயத்தை இவ்வாறு அமைக்க அத்திருப்பணியை ஆரம்பித்து இறைவனடி சேர்ந்த அருட்தந்தை பேர்சிலால் ரொட்றிகோ அடிகளாரையும் நினைவு கூறுகின்றேன். மலையக மண்ணில் அன்னைக்கு மற்றுமொரு ஆலயம் சிறப்பு சேர்ப்பதற்கு பரிசுத்த ஜெபமாலை மாதா ஆலயம் கட்டப்பட்டு திறக்கப்படும் இந்நாளில் அன்னைக்கு அர்ப்பணித்து என் வாழ்த்துக்களை கூறி நிற்கின்றேன்.

பங்கு தந்தை

**அருட்பணி கிறிஸ்டிபோல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ශාස්ත්‍රවේදී

පූජ්‍ය පිටිගල වජිර ස්ථවිර.

විහාරාධිපති,

ශ්‍රී ශාරිපුත්‍රාරාමය-රේවත පිරිවෙන,

රාගල-හල්ගුරන්ඔය,

# සුභාශිංසනය

බහු ජාතික බහු ආගමික හා බහු සංස්කෘතික ජනතාවක් සමගියෙන් යුතුව ජීවත්වෙන නුවරඑළිය, රාගල නගරයට ආගමික වටිනාකමක් මෙන්ම අලංකාරයක්ද ගෙන දෙන, අභිනවයෙන් ඉදි කරන ලද කතෝලික දේවස්ථානය බැතිමතුන් සඳහා විවෘත කරණ අවස්ථාවේ සුභාසිංශනය කරන්නට ලැබීම ගැන රාගල නගරයේ බෞද්ධ විහාරස්ථානයේ විහාරාධිපතින් වහන්සේ හැටියට අපගේ සතුට පළමු කොටම ප්‍රකාශ කරමි.

පුද්ගල ජීවිතයට වටිනාකමක් හා අර්ථවත් බවක් ලබාදීම සියලු ආගම්වලින් අපේක්ෂිත අරමුණකි. එබැවින් ත්‍රිපිටකය තුලින් මෙන්ම ශුද්ධ වූ බයිබලය තුලින්ද අපේක්ෂා කරන්නේ මිනිසා අයහපතින් මුදවා යහපතෙහි යෙදවීමයි. එමෙන්ම සාමකාමී ජීවිතයට මග පෑදීමයි. මෙම අරමුණ හා බයිබලයේ සඳහන් වන අනෙකුත් පරමාර්ථ සාක්ෂාත් කරදීම උදෙසා විවිධ ජාතීන් හා ආගම් නියෝජනය වන ප්‍රදේශයක් වශයෙන් රාගල ශුද්ධ වූ ජපමාල දේවස්ථානයෙන් විශාල මෙහෙයක් සිදුවේ. ජාතික සමගියට හා ආගමික සහජීවනයටද මෙම දේවස්ථානයෙන් ලැබෙන්නේ මහත් රුකුලකි. දශක තුනක පමණ මෑත ඉතිහාසය තුළ මෙම දේවස්ථානයේ අගමික කටයුතු සියලුම පූජකතුමන්ලා සියලු ජාතීන් හා ආගමිකයන් ඉතා සුහදශීලීව කටයුතු කළ බව මම දනිමි. ඉදිරියටත් එම ආගමික සහජීවනයෙන් කටයුතු කරනු ඇතැයි විශ්වාස කරමි.

මෙම දේවස්ථානය තුළින් ප්‍රදේශයට සාමය සමගිය උදාවේවායි මම එක සිතින් ප්‍රාර්ථනා කරමි.

ශාස්ත්‍රවේදී

පූජ්‍ය පිටිගල වජිර ස්ථවිර විහාරාධිපති,

ශ්‍රී ශාරිපුත්‍රාරාමය-රේවත පිරිවෙන,

රාගල-හල්ගුරන්ඔය,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகலை கிறிஸ்துநாதர் ஆலய குருவின் வாழ்த்துச்செய்தி

புனித ஜெபமாலை மாதா ஆலயமானது புதிதாக புனரமைக்கப்பட்டு திறப்பு விழாவை ஆயத்தப்படுத்தும் நினைவு மலருக்கும் வாழ்த்துச் செய்தி எழுத கிடைத்த இறைருளுக்காக மகிழ்ச்சியடைகின்றேன். கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்து புதிய உயிர் கொடுப்பது போல சிறப்பாக இப்பங்கில் பணியாற்றிய குருவானவர்களின் தியாகம், முயற்சி, பணி ஆகியவற்றின் மூலமாக இன்று புனித ஜெபமாலை மாதா ஆலயம் பிரதேசத்தில் ஒரு சாட்சியின் சின்னமாக விளங்குகிறது. வரலாற்றில் இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு பின் நின்றவர்களையும் சிறப்பாக பங்கு மக்களது ஒத்தாசைகளும் மிகவும் சிறப்பானதே.

நூறு வருட நினைவுகளை பசுமையாய் சுமந்து வரும் நினைவு மலருக்கும் நிகழ்வுகளுக்கும் இம்மண்ணில் நிழல் பரப்பி நிற்கும் புனித ஜெபமாலை மாதா ஆலயம் மேலும் ஓங்கி உயர்ந்து நிற்க என் ஆசிகள். இதன் வளர்ச்சிக்காக உழைத்த, உழைத்துக் கொண்டிருக்கும் அனைவரையும் இறைவன் ஆசீர்வதித்து இப்பங்கின் திருப்பணிகளை முன்னெடுத்துச் செல்ல **"உங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர் நீங்கள் இப்பொழுது இருப்பதை விட ஆயிரம் மடங்கு உங்களை பெருகச் செய்வாராக. வாக்களித்தது போல உங்களுக்கு ஆசி வழங்குவாராக."**

**(இணைச்சட்டம் 1:11)**

**அருட்பணி எஸ்.ஜோன்சன்**
**முகாமைக் குரு**
**கிறிஸ்து நாதர் ஆலயம்**
**இராகலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகலை கதிர்வேலாயுத சுவாமி ஆலய பிரதம குருவின் வாழ்த்துச் செய்தி

இராகலை நகருக்கு மேலும் அழகு சேர்க்கும் வகையில் ஜெபமாலை மாதா ஆலயம் நூற்றாண்டை எட்டிப்பிடிக்கவிருக்கும் ஆலயம் என எம்மால் அறிய முடிகின்றது. ஆலயத்தில் இருந்து அருள்பாலிக்கும் ஜெபமாலை அன்னையின் அற்புதம் பற்றி அறிந்துள்ளேன்.

மேற்படி ஆலயம் புணரமைக்கப்பட்டு விசுவாசிகளுக்காக சிறப்பாக திறப்பு விழா நடைபெறுவதை முன்னிட்டு எம் நல் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்வடைவதோடு விழா சிறப்படைய பொதுவான இறைவனை வேண்டிக் கொள்கின்றேன். இறைவா இவர்களது விழா இனிதே நடைபெற உதவிடுவாயாக.

அன்புடன்
பிரம்மஸ்ரீ.வி.இராதாகிருஸ்ணன் குருக்கள்
(பிரதான குருவும் ஜோதிடரும்)
ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம்
(இராகலை நகர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு காணும் பரிசுத்த ஜெபமாலை மாதா ஆலயத்திற்கு எம்முடைய வாழ்த்துக்கள்

மனிதனின் நேயம் கண்டு உண்மையை தேடும் பயணத்தில் வெற்றி பெற நன்மை எதுவென்று புரிய எம்முடைய உள்ளம் கனிந்த வாழ்த்துக்கள்.

அறிவு தேடத்தேடத்தான் ஞான களஞ்சியம் ஊற்றெடுக்கும் அனைவரும் சேர்ந்து (வறக்கு) என்று சொல்லக்கூடிய உண்மையை தேடுவோம்.

நன்றி

நுருல் இஸ்லாம்

ஜு்ம்மா பள்ளி வாசல்

இமால் பைசார்

இராகலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ජපමාලා දේව මාතාවනි - ජය ශ්‍රී වේවා!

රාගල ජපමාල මාතා දේවස්ථානයේ, අභිනවයෙන් ඉදිකළ නව දෙව් මැදුර, ආශිර්වාද ගැන්වීම හා අභිෂේකය වෙනුවෙන්, මේ උතුම් අවස්ථාවේ සුභ පැතුම් පණිවුඩයක් නිකුත් කිරීමට හා කතෝලික ජනතාව හා අත්වැල් බැඳගැනීමට ලැබීම ගැන සන්තෝෂ වෙමි. බ්‍රිතාන්‍ය යුගයේදී, ඉදිව තිබුණු මෙම දෙව් මැඳුර ප්‍රතිසංස්කරණය කිරීමේ අවශ්‍යතාවය අවබෝධ කරගෙන, ඉතා කෙටි කලකින් දර්ශනීය නිමාවකින් අවසන් කිරීමට ඔබසැම තුළ තිබුණු කැපවීම, වැයවීම හා ජවය ප්‍රසංසනීයයි. එය කොයි කාගේත් පැසසුමට ලක්විය යුතුවේ.

දේව මාතාවන්ගේ මිනිසත්කමින්, ආදර්ශය තුළ, බහුලවූ ආශිර්වාදය ප්‍රාර්ථනය කරමින් සුවිශේෂ වූ දීර්ඝ ගමනක් යන්නට හැකිවේවායි මාගේ ඒකායන ප්‍රාර්ථනයයි.

**ජගත් කුමාර සමරහේවා**
ගරු සභාපති,
වලපනේ ප්‍රාදේශීය සභාව


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குசபை செயலாளரின் வாழ்த்துரை



"இதோ ஆண்டவரின் அடிமை உமது வார்த்தையின் படியே ஆகக்கடவது" என்ற வார்த்தையின் மூலம் இறைவனின் திட்டத்தை நிறைவேற்றி உலகெல்லாம் இறையாட்சியை கொண்டு சென்றவள் தாய் மரியாள் பரிசுத்த ஜெபமாலை மாதா ஆலயம் எனும் பெயரில் மலையகத்தின் எழில் மிகு அழகு கொண்ட இராகலை நகரில் எழுந்தருளிய அன்னையின் ஆலயம் 100 ஆண்டுகள் கடந்து இன்று முழுவதுமாய் புதுப் பொழிவுடன் புதிதாய் கட்டப்பட்டு இறைவன் வாழும் உறைவிடமாய் கம்பீரமாய் காட்சி தருகின்றது. இந்நேரத்தில் முதல் ஆலயமானது ஜோசப் காவெலோ குடும்பத்தினராலும் சவரிமுத்து K.G அவர்களின் அயராத உழைப்பினாலும் கட்டப்பட்டதாக கேள்விப்பட்டபோது பங்குசபை செயலாளர் என்ற வகையில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் இவ்வாலயம் உருவாக இரவு பகல் பாராது தூணாக நின்று வேலைசெய்யும் எமது பங்கு குருவானவர் அருட்திரு.கிறிஸ்டிபோல் அடிகளார் அவரோடு இணைந்து பணியாற்றும் எமது பங்கின் பங்குசபையினர், நிதிகுழுவினர், மறையாசிரியர்கள், திருப்பாலத்துவ சபையினர், கத்தோலிக்க அரச ஊழியர்கள், மரியாயின்சேனை அங்கத்தினர்கள், பெண்கள் ஒன்றியத்தினர், மாணவர் ஒன்றியத்தினர், மற்றும்.... எமது பங்கு அனைத்து கத்தோலிக்க மக்களையும் ஏனைய சமய சகோதரர்கள் பிரதேச அரசியல்வாதிகள் அனைவரையும் நினைவு கூறுகின்றேன்.

இறைவனின் சித்தத்திற்கேற்ப 2014.10.04 ஆம் திகதி ஆயரின் கரம் கொண்டு ஆலயம் மீளாபிஷேகம் செய்யப்படுகின்றது. இந்நேரத்தில் மனம் சோர்வின்றி இடர்கள் வரும் போதெல்லாம் ஏதாவது ஒரு வழியில் உதவிகள் வந்து குவியும் போது மெய் சிலிர்த்த சந்தர்ப்பங்கள் ஏராளம். புதுமை என்பதை விட தாய் மரியாளின் பரிந்துரைப்பு இறைவன் மட்டில் எவ்வளவு விரைவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பதை நினைக்கும் போது தாய் மரியாளின் அன்பை என்னவென்று எழுத்தில் எடுத்துரைப்பது "மரியே வாழ்க" "ஆண்டவர் நீதியற்றவர் அல்ல இறைமக்களுக்கு நீங்கள் முன்பு தொண்டாற்றி வந்தீர்கள் இப்பொழுதும் தொண்டு செய்து வருகின்றீர்கள் எனவே கடவுள் பெயரால் நீங்கள் காட்டிய அன்பையும் உழைப்பையும் மறக்கமாட்டார்" (எபிரேயர் 6:10)

என்ற இறைவாக்கு இன்றும் இறைவன்பால் எம்மை நெருங்கச் செய்கின்றது. மேலும் எம்மை கைவிடமாட்டார் எனும் இறைவனின் வார்த்தைகள் எது வந்தாலும் எஞ்சி நிற்கும் ஆலய பணியில் இன்னுமாய் ஆர்வத்துடன் இயங்கச் செய்யும் உரமாய் அமைகின்றது. மேலும் இறைவார்த்தையான (லூக் 17:10) தாம் பணித்ததை செய்வதற்காக அவர் தம் பணியாளருக்கு நன்றி கூறுவாரோ? அது போலவே நீங்களும் உங்களுக்கு பணிக்கப்பெற்ற யாவற்றையும் செய்த பின் பயனற்ற பணியாளர்கள், எங்கள் கடமையைதான் செய்தோம் என சொல்லும் வார்த்தைகள் இறைவனின் திட்டத்தை நிறைவேற்ற கிடைக்கப்பெற்ற பாக்கியமான சந்தர்ப்பமாக கொள்கின்றேன்.

ஏனெனில் நான் நன்றி சொல்பவன் அல்ல மாறாக அருள் வரங்களால் நிரப்புபவன். அனைவரின் அன்பான வார்த்தைகள் எனது பெயரை சொல்வதற்காக அல்ல மாறாக இறைவனின் திட்டத்தினை நிறைவேற்றுவதற்காகவே. ஆகவே எங்களோடு சேர்ந்து உழைத்த எண்ணற்ற நன்கொடையாளர்களுக்கும் உடன் உழைப்பாளர்களுக்கும் மாதாவின் பரிந்துரையும் இறையாசீரும் நிறைவாக கிடைக்கும். மூவொரு கடவுளின் அருளாசீர் அனைவர் மீதும் பொழியப்பட வேண்டுமென பிராத்தித்து தேவனின் திருச்சபை மென்மேலும் ஆழமாய் வேறூன்ற உழைப்போம் எனும் உறுதிமொழியோடு எந்நாளும் தாயின் அன்பிலும் இறையேசுவின் ஆசிர்வாதத்தாலும் நிறைவாய் வாழ அனைவரையும் இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துகின்றேன்.

நன்றி

G.ஜோர்ஜ்
பங்குசபை செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# සම ලේකම්තුමාගේ සුභාශිංසනය

## ශුද්ධාත්මයානන් වහන්සේ වැඩම කළසේක!

වසර 102කට උරුමකම් කියන, රාගල ජපමාල මාතා දේවස්ථානය අභිනවයෙන් ගොඩනගා, ආසිරිගැන්වීම වෙනුවෙන් මෙම පණිවුඩය ලබාදීමට ලැබීම මහත් සතුටකි.

නව දේවස්ථානයක, අවශ්‍යතාවය හඳුනාගෙන බොහෝ කලක් ගතවූ මුත්, එම භාරදූර කාර්‍යයට ආරම්භයක් ලබා දීමට ධෛර්‍යමත් වූ සඟ සුවපත් ගරු පර්සි ලාල් රොඩ්රිගෝ පියතුමන් ගැන මෙහිලා සිහි කිරීම යුතුකමකි.

ඉන් වසර 2කට පමණ පසු, මරි මව්ගේ මැදහත්කම මත අපගේ මීසම් භාර පියතුමා ලෙස සපැමිණි, ගරු ක්‍රිස්ටි පෝල් පියතුමාගේ අප්‍රතිහත ධෛර්‍යය හා නිතර යාඥාව තුළින් සහෝදර දයාව නමැති ආධ්‍යාත්මික බලයෙන් ජනතාව සන්නද්ද කළහ.

එහි ප්‍රතිඵලයක් ලෙස පදිවි භාර රදගුරු හිමිපාණන් හා අනුනායක හිමිපාණන්ගේද මඟ පෙන්වීම යටතේ වසර දෙකක් තුළදී චමත්කාරවත්, දෙව්මව් තුමියට කැපකළ දෙව් මැඳුරක් ලෙස නිම කිරීමට දායකවීම භාග්‍යයකි.

මෙම කටයුත්තේදී, කුඩා දරුවාගේ සිට වැඩිහිටියා දක්වා දිවා රාත්‍රී නොබලා දායක වූ මීසම් සභාවේ සැමට මාගේ භක්ති ප්‍රණාමය! එසේම මෙම සද්කාර්‍යය සඳහා ශ්‍රමයෙන්, ධනයෙන් හා කැපවීමෙන් දායක වූ සියළු අන්‍යාගමික පරිත්‍යාගශීලීන්වද, විශේෂයෙන්ම රාගල ශාරිපුත්‍රාරාමයේ නායක ස්වාමින්වහන්සේගේ මඟ පෙන්වීමද, යුගයේ අවශ්‍යතාවයක් ලෙස සනිටුහන් කරමි. තවද අප දිස්ත්‍රික්කය තුළ දේශපාලන ක්ෂේත්‍රයේ නියුතු ගරු මහත්ම මහත්මීන් හා බුද්ධ ශාසන හා ක්‍රිස්තියානි කටයුතු අමාත්‍යාංශයේ ස්ථිර ලේකම් තුමාටද මීසම් සභාව වෙනුවෙන් ස්තූතියි. ස්තූතියි. ස්තූතියි.

දේව අම්මාගෙන්, අප ලත් මෙම ආදරයේ තිළිණය කඳුකරයට දායාදයක්ව, දේශයේ සාමය හා ජය ශ්‍රීය වෙනුවෙන් යදින, කිතුණු ගුණ ධර්ම වැඩි වර්ධනය කර ගනිමින් ආදර්ශමත් ලාංකිකයන් ලෙස මෙම තිළිණය බෙදා ගනිමු.

ඔබ සැමට භාග්‍යවත් මරිය මව අනුව යන්නට, එතුමියගේ සෙනෙහස ලබන්නට, දේව ආශිර්වාදයත්, දේව අම්මාගේ මධ්‍යස්ථය හා රැකවරණයත් නොඅඩුව ලැබේවා!

**උදය ප්‍රේම කුමාරසේන**
**සම ලේකම්-මීසම් සභාව-රාගල**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாக்க குழுவின் எண்ணத்திலிருந்து

"என் வலிமையால் இதை நான் செய்து முடித்தேன். என் ஞானத்தாலும், அறிவு கூர்மையாலும் அதற்கு திட்டங்கள் தீட்டினேன். (எசாயா 10:13)"

நூறு வருடங்கள் பழமை வாய்ந்த எமது பரிசுத்த ஜெபமாலை மாதா ஆலயம் இன்று புது பொழிவோடு இராகலை நகரின் மத்தியில் கம்பீரமாக எழுந்தருளி நிற்கிறது. ஜெபமாலை அன்னை என்று கத்தோலிக்க மக்களாலும், சந்தனமாதா, மாதா கோவில் என்று ஏனைய மக்களாலும் அன்போடு அழைக்கப்படும் எமது பாதுகாவலியான அன்னையின் ஆலயம், இராகலை வாழ் பிரதேச அனைத்து இன மக்களின் ஒற்றுமையின் சின்னமாக திகழ்கின்றது. எவ்வித இன, மத, மொழி வேறுபாடுகளுமின்றி அனைத்து மக்களும் வந்து வழிப்பட்டுச் செல்லும் இடமாகவும் இவ்வாலயம் திகழ்கின்றது. அனைத்து மக்களுக்கும் வரங்களை அள்ளி வழங்கும் அன்னையால் நிகழ்ந்த புதுமைகள் ஏராளம்.

ஜெபமாலை அன்னையின் ஆலயம் முற்று முழுதாக புதிதாக நிர்மாணிக்கப்பட்டு 2014 ஒக்டோபர் மாதம் 04 திகதி சனிக்கிழமை இன்று மீளாபிஷேகம் செய்யப்படும். இந்த நாளில் நினைவு மலர் ஒன்றை வெளியிடுவதில் நூலாக்கக் குழு என்ற வகையில் மகிழ்ச்சியடைகின்றோம். எனவே இந்த நூல் சிறப்பாக வெளிவர உதவிய அனைவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

முதலில் இவ்வாலயம் சிறப்பாக அமைந்திட எல்லா வேதனைகள், சோதனைகள், சவால்கள் மத்தியில் எங்களை வழிநடத்திய இறைவனுக்கு நன்றி நவில்கின்றோம். அத்துடன் எங்களது மறைமாவட்ட ஆயர் அதி.வண.ஜோசப் வியானி பெர்ணாண்டோ ஆண்டகை அவர்களுக்கும், மறைமாவட்ட குருகுல முதல்வர் வணக்கத்துக்குரிய அருட் தந்தை மில்றோய் பொன்சேகா அடிகளார் அவர்களுக்கும் இந்த ஆலய கட்டுமான பணிகளை ஆரம்பித்த காலஞ்சென்ற முன்னால் பங்குத்தந்தை பேர்சிலால் ரொட்றிகோ அவர்களுக்கும், மேலும் குறுகிய காலத்தில் அதாவது மூன்று வருடங்களில் இவ்வாறான பிரமாண்டமான ஆலயத்தை கட்டி முடிக்க இரவு, பகல் பாராது தனது முழு ஆற்றல் சக்திகளை இதற்காகவே அர்ப்பணித்து இவ் இறை பணியை செவ்வனே நிறைவேற்றி வருகின்ற தற்போதைய எங்கள் பங்குத்தந்தை அருட்பணி கிறிஸ்டி போல் அடிகளாருக்கும் பங்கு மக்கள் சார்பாக உளம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் இந்த நினைவு மலர் சிறப்பாக அமைந்திட வாழ்த்துச் செய்திகளை தந்து உதவிய எங்கள் திருதந்தை முதலாம் பிரான்சிஸ் அவர்களுக்கும், எங்கள் மறைமாவட்ட ஆயர் அவர்களுக்கும், மறைமாவட்ட குருகுல முதல்வர் அவர்களுக்கும் மேலும் வாழ்த்துச் செய்திகளை தந்துதவிய அருட்தந்தையர்கள் ஏனைய மத தலைவர்கள், பிரதேச சபை தலைவர் அவர்களுக்கும் பங்கு செயலாளர்களுக்கும் நன்றி மலர்களை தூவுகின்றோம்.

இந்த நினைவு மலர் சிறப்பு பெற விளம்பரங்களை தந்துதவிய வர்த்தகர்கள் வியாபார நிறுவனங்கள், குடும்பங்கள், தனிப்பட்ட நபர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் இந்த நூல் மேலும் எழுத்துரு பெற அயராது உழைத்து அட்டைப்படம் உட்பட நினைவு மலரை முழுமையாக வடிவமைத்த செல்வி.செ.சிரஞ்சனி அவர்களுக்கும் இந்நூலை அச்சுப்பதிவு செய்த தாரணி அச்சகத்தாருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். இறுதியாக எமது ஆலய திறப்பு விழாவில் கலந்து சிறப்பித்த எமது ஆயர் உட்பட அருட்தந்தையர்கள் அருட் சகோதரிகள் அனைவருக்கும், அனைத்து விருந்தினர்களுக்கும் பங்கு மக்களுக்கும், இராகலை வாழ் பிரதேச அனைத்து மக்களுக்கும் பொருள் உதவி, சரீர உதவி நல்கிய அனைவருக்கும், மற்றும் நூலானது சிறப்புற வெளிவர முழு உதவி நல்கிய நூலாக்க குழுவிற்கும் உளம் கனிந்த நன்றியை நவில்கின்றோம். இங்கு பெயர் குறிப்பிடாமல் யாரும் இருந்தால் அவர்கள் அனைவருக்கும் எமது நன்றியெனும் மலர்களை தூவுகின்றோம்.

நன்றி


திரு.அந்தோனிமுத்து அன்புரோஸ்
நூலாக்க குழு சார்பாக

நூலாக்க குழு

| | |
|---|---|
| A.அன்புறோஸ் | ஆசிரியர் |
| L.ஜோசப் | அதிபர் |
| A.அருள்நேசன் | ஆசிரியர் |
| D.யேசுபோல் | ஆசிரியர் |
| S.சிரஞ்சனி | பத்திரிகையாளர் |
| S.சக்கரியாஸ் | மறையாசிரியர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANTON

## AGRO CHEMICALS

**Dealers in**
**Agro Chemicals**
**Vegetable Seeds,**
**Potatoes & Fertilizer**




**No.20, Ragala Bazaar,**
**Halgranoya.**
**Tel : 052-2265016/0777-659963**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க பெண்கள் ஒன்றியம்

“எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள். இடை விடாது இறைவனிடம் வேண்டுங்கள். எல்லாச் சூழ்நிலைகளிலும் நன்றி கூறுங்கள். உங்களுக்காக கிறிஸ்து இயேசு வழியாக கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே” (தெசோ 5: 16-18)

இயற்கை எழில் கொஞ்சும் இயேசு கிறிஸ்துவினால் இரசிட்சிக்கப்பட்ட புனித நகரான இராகலை நகரில் தேவனின் தேவதாயின் பெருமையை இப்பூவுலகிற்கு பறைசாற்ற வேண்டும் என்ற உன்னத உயரிய நோக்கில் தன்னையே கிறிஸ்துவிற்காய் அர்ப்பணித்து உண்மையாய் செயற்பட பல பக்தி சபைகளை தாபித்த உன்னத பெருமை பங்குத்தந்தை கிறிஸ்டி போல் அவர்களையே சாரும்.

ஆலயத்திற்கு வருகின்றோம் போகின்றோம் என்ற மனப்பாங்கு மட்டுமே எம்மில் இருந்தது. ஆனால் இப்பக்தி சபைகள் மூலம் இந்நிலை மாற்றமடைந்து இயேசுவிற்காய் உண்மையாய் உணர்வுபூர்வமாய் செயற்பட ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து ஆலயத்தின் ஆன்மீக துறைகளில் ஈடுபட்டு மனநிறைவான செயல்களை செய்து மன நிம்மதியை தேடித்தந்த எமது பங்குத்தந்தைக்கு முதலில் நன்றி செலுத்துகின்றோம்.

இவற்றில் எமது பெண்கள் ஒன்றியம் கடந்த 06.09.2012 அன்று பங்குத்தந்தை கிறிஸ்டிபோல் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 30 அங்கத்தினரைக் கொண்ட இவ் ஒன்றியம் இன்றும் நல்ல முறையில் இயங்கி வருகின்றது. இவர்கள் அனைவரின் ஒத்துழைப்போடு பல வேலைத்திட்டங்களை மேற்கொள்ளப்படுகின்றது. உதாரணமாக வீடுகள் சந்திப்பு, குழுவாக சென்று செபமாலை சொல்லுதலும், தியானம், திருப்பலி ஒழுங்கு செய்தல், இலவச மருத்துவமுகாம் நடத்துதல், திருயாத்திரை செல்லுதல், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பண ரீதியாகவும் பொருள் ரீதியாகவும் உதவி செய்தல், ஒளி விழா செய்தல், உட்பட 13 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு கருத்தரங்கு நடாத்துதல், சிற்றுண்டி கடைகள் நடாத்துதல், இது போன்ற சிறிய சிறிய செயற்பாடுகள் மூலம் புதிதாக கட்டி எழுப்பிய எமது அன்னையின் ஆலயத்திற்கு பெண்கள் ஒன்றியம் தங்களது ஒத்துழைப்பு மூலம் சிறு சேமிப்பை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான வேலைத்திட்டங்களை சரியான முறையில் வழி நடத்தி செல்ல உதவி புரிந்த எமது பங்கு தந்தைக்கும், பங்கு சபை உறுப்பினர்களுக்கும், ஏனைய பக்தி சபை உறுப்பினர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் இவ் பெண்கள் ஒன்றியம் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளது. மேலும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள எமது அன்னையின் ஆலயமானது பல அற்புதங்களோடு இயேசு கிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டு அதன் மகத்தான பெருமையை உலகிற்கு உணர்த்தி தன்னையே அர்பணிக்கும் பெண்கள் ஒன்றியத்தின் உன்னத சேவை மென்மேலும் வளரவும் இது போல இன்னும் பல பக்தி சபைகளை ஸ்தாபித்து செபமாலை அன்னையின் பெருமையை உணர்த்த வேண்டும் என வாழ்த்துவதோடு தங்களது பணியை வெற்றிகரமாக நிறைவேற்றி செல்ல வேண்டும் என எமது பெண்கள் ஒன்றியம் சார்பாக இதயம் கனிந்த வாழ்த்துக்களை ஜெபமாலை அன்னையின் பாதங்களில் சமர்பிக்கின்றேன்.

செயலாளர்
திருமதி.அருள்நேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பங்கிலிருந்து இறை பணிக்கு அழைக்கப்பட்டவர்கள்

அருட்தந்தை மரிய அந்தனி மல்லியப்பு
இயேசு சபை



அருட்தந்தை
மனுவேல் ஆசீர்
டியனில்ல
S.S.S.



அருட் சகோதரர்
என்டன் ஜோ மைக்கல்
ஸ்டாபோட்
சொமாஸ்கன் சபை



அருட்சகோதரி
மாரி சந்தனம்
வலப்பனை
கார்மேல் சபை



அருட்சகோதரி
ஜெரோமி செபஸ்டியன்
வலப்பனை
அன்னை திரேசா
கன்னியர் சபை



அருட்சகோதரி
மாலா கிரேஸ்
ஹல்கரனோயா
அன்னை திரேசா
கன்னியர் சபை



அருட்சகோதரி
டெக்லா
மகாஊவா
அன்னை திரேசா
கன்னியர் சபை



அருட்சகோதரி
ரோசிலியா ஜோசப்
மகாஊவா
அன்னை திரேசா
கன்னியர் சபை



அருட்சகோதரி
ஜெனோவா கத்தரின்
வலப்பனை
பிரான்சிஸ்கன் சபை



அருட்சகோதரி
ஹெலன் துஷ்யந்தி
ஹல்கரனோயா
ஆசிர்வாதப்பர்
கன்னியர் மடம்



அருட்சகோதரி
மேவின் கிரேஸ்
ஆசிர்வாதப்பர்
கன்னியர் மடம்

அருட்சகோதரி
கிறிஸ்டி சந்தனம் குருஸ்
அல்மா லியாங்வெல்ல
ஆசிர்வாதப்பர்
கன்னியர் மடம்

## குருமடமானவர்கள்

சகோ.அ.வியானி பெர்ணாண்டோ
மகாஊவா
அ.ம.தி.
யாழ்ப்பாணம்

சகோ.மைக்கல் ஜோன்
மகாஊவா
புனித சூசையப்ப சிறிய
குருமடம்
பூரணவத்தை

சகோதரி. மரிய அனோசியா
மரியன்னையின் நற்கருணை
நாதர் சபை
வலப்பனை

சகோதரி. நிரோஷினி
மகாஊவா
கார்மேல் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்கு சபை உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பங்குத்தந்தை, அருட்பணி கிறிஸ்டி போல் |
| மடத்தலைவி | : | அருட்செல்லி வெரோனிக்கா, |
| செயலாளர்கள் | : | திரு.ஜோர்ஜ், திரு.குமாரசேன, |
| இராகலை நகர் | : | திரு.ராயர், |
| இராகலை 2 ஆம் பிரிவு | : | திரு.லூர்ந்து நாதன், |
| இராகலை | : | திரு.சிகாமணி, |
| ஆள்கரனோயா | : | திரு.பாக்கியநாதன், |
| உடப்புசல்லாவ | : | திருமதி. திரேசா, |
| எமஸ்ட் செல்வகந்த | : | திருமதி.சுருபராணி, |
| சென்லெனாட்ஸ் | : | திரு.டேனியல் |
| இஸ்டாபோர்ட் | : | திருமதி.ஜெபமாலை நாயகி, |
| கிளன்டவன் | : | திரு.வேதநாயகம், |
| டியனில்ல | : | திரு.சிங்கராயர், |
| வலப்பனை | : | திரு.லூர்து சாமி, |
| ஹைபொரஸ்ட் | : | திரு.சேவியர் |
| பிரம்லி | : | திரு.ரிச்சட் |
| அல்மா | : | திருமதி.ஜோன் பீட்டர் |
| ரிலாமுல்ல | : | திரு.ஜேக்கப் பெர்ணாண்டே |
| கோணப்பிட்டிய | : | திரு.யேசுதாசன் |
| புறாக்சைட் | : | திரு.சந்திரசேகரன் |
| சென்ஜோன்ஸ் | : | திரு.நிக்கலஸ் |
| கோட்பில் | : | திரு.ஜீவராஜ், |
| மகாஊவா | : | திரு.அருள்சாமி |
| மகாஊவா | : | திரு.திவ்வியநாதன் |
| வோல்டிமார் | : | திரு.ஜோக்கீம் |
| டெல்மார் | : | திரு.பொஸ்கோ |
| ஹரஸ்பெத்த | : | திரு.ரணதுங்க |

## பக்தி சபை பிரதிநிதிகள்

| | | |
|---|---|---|
| திருவழிப்பாட்டுக்குழு | : | செல்வி:கிறிஸ்டினா திரு.ரேமன்ட், |
| பாடர்குழாம் | : | செல்வி.ரிசந்தலா செல்வி.ஜெபமாலை மேரி |
| திருப்பாலத்துவ சபை | : | திருமதி.லுஸ்டினாமேரி செல்வி.கிங்சலா |
| மாணவர் ஒன்றியம் | : | செல்வி. விதுர்சா, செல்வன் : கோகுலன் |
| இளைஞர் ஒன்றியம் | : | திரு.அலோசியஸ், செல்வி.பிரிட்டா |
| பெண்கள் ஒன்றியம் | : | திருமதி.ஞானபிரகாசம் திருமதி.அருள்நேசன், திருமதி.சக்கரியாஸ், திருமதி.கோல்டாமேரி, |
| மரியாயின் சேனை | : | திருமதி.நோயல் திரு.தேவசகாயம் |
| நிதிக்குழு | : | திரு.இருதயசாமி, திரு.குமாரசேன |
| மறையாசிரியர்கள் | : | திரு.செபஸ்டியன் திரு.ரொடிசன், |
| குடும்ப அப்போஸ்தலிக்க பணி | : | திரு.சக்கரியாஸ் |
| கத்தோலிக்க ஆசிரியர்கள் | : | திரு:ஜோசப் திரு.அருள்நேசன் |
| நியமன அங்கத்தவர்கள் | : | திரு.அன்புரோஸ், திரு.சின்னப்பன் திரு.பெற்றிக், திரு.பெர்ணான்டோ, திருமதி.நன்சி நடேசன். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியாயின் சேனை

இராகலை புனித ஜெபமாலை மாதா பிரசீடியம்

| | | |
|---|---|---|
| ஆன்ம இயக்குனர் | :- | அருட்பணி கிறிஸ்டிபோல் |
| சேனைத்தலைவி | :- | திருமதி மொரின் நோயல் |
| சேனை உபதலைவர் | :- | திரு.S.சிகாமணி |
| செயலாளர் | :- | திரு.வேதநாயகம் |
| பொருளாளர் | :- | திரு ஆ.சித்ரா |
| உறுப்பினர்கள் | - | 9 பேர் |

**சேனையின் செயற்பாடுகள்**

- ஞாயிறு தோறும் சேனைக்கூட்டம் நடாத்துதல்.
- ஞாயிறு தோறும் திருப்பலிக்கு முன் செபம் சொல்லுதல்
- மாதந்தோறும் நிர்வாக்குழுவினர் கியூரியா கூட்டத்தில் கலந்து கொள்ளல்
- ஜெபமாலை பேரணி யாத்திரைகளுக்கு கியூரியா உறுப்பினர்களோடு கலந்து செல்லுதல்.
- கோயில் திருமணம் முடிக்காதவர்களுக்கு பங்குதந்தையின் உதவியுடன் மெய்விவாக அருட்சாதனம் பெற ஊக்கமளித்தல்.
- மறைவகுப்பிற்கு வராதவர்கள், திருவருட்சாதனங்களை பெறாதவர்கள், கோயிலுக்கு வராதவர்களை இனங்கண்டு அவர்களின் வீடுகளை தரிசித்து ஆலயத்திற்கு வர ஏற்பாடுகள் செய்து கொடுத்தல்
- நோயாளர்களை வைத்தியசாலைக்கு சென்று சந்தித்து அவர்களுக்காக செபித்தல்
- இறந்தவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக செபித்தல்.
- குடும்ப பிரச்சினைகளை பங்குதந்தையின் உதவியுடன் தீர்த்து வைத்தலும் அவர்களுக்காக செபித்தல்.
- சிரமதானப்பணிகளில் பங்கெடுத்தல்.
- திருப்பலி, திருவிழா, சிலுவைப்பாதை, ஞான ஒடுக்கம் போன்றவற்றிற்கு கலந்து கொள்ளல்.

மரியாயின் சேனை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்துகட்டளைகளும் எமது வாழ்வும்

மனிதன் மாண்புள்ளவன் மண்ணுலகில் மாண்புடன் வாழ அழைக்கப்பட்டவன். இறைசாயலாகப்படைக்கப்பட்ட மனிதன் மாட்சிமையும் மேன்மையும் முடியாக சூட்டப்பட்டவன் அழியாத ஆன்மாவையும் படைப்புக்களில் மேன்மையானவனாகவும் படைக்கப்பட்டவன் மனிதன் மாண்புடன் வாழ நேர்மையுடனும் நீதியுடனும் நல்லொழுக்கத்துடனும் வாழ இறைவனால் மோயீசனின் ஊடாக இஸ்ரவேல் மக்களுக்கு சீனாய் மலையடிவாரத்திலே பத்துக்கட்டளைகள் அளிக்கப்பட்டது. நிலைவாழ்வை பெற்றுக்கொள்ள தான் என்ன செய்ய வேண்டும் எனக்கேட்ட செல்வாரன ஓர் இளைஞனுக்கு இயேசு அளித்த பதில் நீர் வாழ்வடைய விரும்பினால் கட்டளைகளைக் கடைப்பிடியும் (மத்தேயு 19/16-17) இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் பகுத்தறிந்து செயலாற்றும் திறமையுடையவனாகவும் கற்பனைத்திறனுடையவனாகவம் இறைவனால் படைக்கப்பட்டாலும் மனிதனுக்கு உதவியாக, உறவை வளர்க்க, உறவு நீடிக்க கரம் கொடுத்து வாழ வைப்பது இப்பத்துக்கட்டளைகளாகும்.

மக்களோடு தமக்கிருந்த உறவை வளர்க்க உறவு நீடித்து நிலைப்பெற அன்று இஸ்ரவேல் மக்களின் நல்லொழுக்கம் கட்டிக்காக்கப்பட மோசே வழியாக இறைவன் அளித்த கொடைகள் பத்துகட்டளைகள் அது அன்றைய சமூகத்தினருக்கு மட்டுமல்ல இன்றைய சமூகத்திலும், எதிர்கால சந்ததியினரும் வாழப்பட வேண்டியவை மட்டுமல்ல எச்சமயத்தினருக்கும் கடைப்பிடிக்க வேண்டியவையாகும். பத்துகட்டளைகளில் முதல் மூன்றும் கடவுளின் உரிமைகளையும் அவர் மட்டில் மக்களின் கடமைகளையும் பற்றியவை. தனி ஆராதனை மரியாதை ஓய்வு நாள் ஆண்டவரை மட்டுமே வழிபடுவதிலும் சிலை வழிபாட்டை தடை செய்வதிலும் பிற நாடுகளுடனான அனைத்து உடன்பாடுகளையும் விலக்குவதிலும் அக்கறை காட்டப்படுகின்றது. ஏனைய ஏழும் மற்றவர்களின் உரிமை பற்றியவை ஒருவரின் பெற்றோரை மதிப்போம், மனித உயிரை காப்போம். இல்லறத்தை நல்லறமாக்குவோம். பிறர் உடமைகளை காப்போம். உண்மை உரைப்போம் என வலியுறுத்துகின்றன.

இன்றைய நாட்களில் நாம் ஆண்டவரின் அன்புறவில் வாழ வேண்டுமானால் இறைவன் உவந்தளித்த முதல் மூன்று கட்டளைகளையும் எமது வாழ்வில் முழுமூச்சாக கொண்டு வாழும் போது இறைபிரசன்னம் எம்மை ஒளிர்விக்கும். நாம் இறைவனை அன்பு செய்வோமானால் எம் அயலவரையும் அன்பு செய்து ஏற்றுக்கொள்வோம். ஏனைய ஏழு கட்டளைகளையும் பின்பற்றி பிறரை அன்பு செய்து, பிறரோடு நாம் ஐக்கியத்துடன் வாழ வேண்டும்.

எஸ். மேரி கிறிஸ்டினா

மறையாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்கு வளர்ச்சி மகாஊவா கிளை பங்கின் பங்களிப்பு

மேற்கே மலைகளையும் கிழக்கே பெரும்பான்மையின மக்கள் வாழும் கிராமங்களையும் கொண்ட மகாஊவா தோட்டம் 1865 ஆம் ஆண்டு மேற்கத்தைய வெள்ளையர்களால் விட்டாபோஸ் எனும் கம்பனியால் ஆரம்பிக்கப்பட்டது. முதலில் ஏலமும் கோப்பியும் உண்டாக்கப்பட்டது. 1870 ஆண்டு திரு.விசுவாசம் என்பர் ஓர்சிறு செபகூடம் அமைத்து வழிபாடு செய்து வந்தார். அப்போதைய நுவரெலியா பங்கு தந்தை அருட்பணி சிறிவர்த்தன அவர்கள் வருடத்துக்கு ஒரு முறை வந்து திருப்பலி நிறைவேற்றி வந்தார். இதனை தொடர்ந்து 1905 ஆம் ஆண்டு கருத்தசாமி பெரிய கங்காணி தலைமையில் செபக்கூடம் திருத்திக் கட்டப்பட்டது இக்கால கட்டத்தில் நுவரெலியா பங்கு தந்தை கிளமன்ட் அவர்கள் ஆறு மாதத்திற்கு ஒரு முறை வந்து திருப்பலி கொடுத்து வந்தார்.

இக்காலக் கட்டத்தில் தோட்டம் மூன்று பிரிவுகளைக் கொண்டிருந்தது. தேயிலை நன்கு வளர்ச்சியடையவே தொழிலாளர்கள் தேவைபடவே இதன் தமிழகத்தின் மதுரை, திருச்சி, சேலம் மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்டனர். இவர்களில் கிறிஸ்தவர்கள் அதிகரித்து வரவே இரண்டாம் பிரிவிலும் தொழிலுக்காக அமர்த்தப்பட்டனர். இக்குடும்பங்களிலிருந்து பிறந்த பிள்ளைகள் நிறையவே 1950 ஆம் ஆண்டு அப்போதைய பெரிய கங்காணியாக இருந்த சந்தனம் என்பவர் பழைய கோவிலை இடித்துவிட்டு அதே இடத்தில் தற்போதயை பெரிய கோயிலை மக்கள் ஒத்துழைப்போடு கட்டுவித்தார். இக்கால கட்டத்தில் 22/04/1952 ஆம் ஆண்டு சின்னதம்பி மகன் மாணிக்கம் என்பவர் மனம் திரும்பி ஞானஸ்தானம் பெற்ற வேளை 1960 ஆம் ஆண்டில் பங்கு தந்தையாக வந்த அருட்பணி சூசைபிள்ளை என்பவரால் தோட்ட கோவில் பிள்ளையாக நியமிக்கப்பட்டார்.

இந்த வேளையில் பங்குதந்தை அருட்பணி சூசைபிள்ளை அவர்களால் கத்தோலிக்க சேவா சங்கம் பங்கில் உருவாக்கப்பட்டது. மற்றும் மரியாயின் சேனை கத்தோலிக்க இளைஞர் இயக்கம் போன்றவை செயற்பட்டது. மாணிக்கம் கோவில் பிள்ளையோடு திரு.பெஞ்சமின் திரு அந்தோனிசாமி, திரு சவரிமுத்து போன்றவர்கள் இணைந்து சமயத்தை நல்வழிப்படுத்தி வந்தனர். 1964 ஆம் ஆண்டு பங்கு தந்தையாக வந்த அருட்பணி பியோ அவர்களுடன் ஒத்துழைத்து சமயத்தை முன்னெடுத்து வந்தனர். கோவிலின் இரு பக்கங்களும் இவர் காலத்திலேயே கட்டப்பட்டது. இருவருக்கு பின் வந்த அருட்தந்தையர்கள் காலத்தில் திரு. பெஞ்சமினும், மாணிக்கமும் நாவலபிட்டிய சோளகந்தை சென்று 40 நாள் கருத்தரங்கில் கலந்துக்கொண்டனர். 1965 ஆம் ஆண்டு வந்த பங்கு தந்தையான வண சின்னசுவாமியாரோடு இணைந்து நுவரெலியா அட்டன் கத்தோலிக்க இளைஞர் மாநாட்டில் கலந்து சிறப்பித்தனர். 1970 ஆம் ஆண்டில் பங்கு தந்தை அருட்பணி அல்போன்ஸ் என்பவர் காலத்தில்தான் கோவில் அபிவிருத்தி வேலையான கூரைக்கு சீலிங் வேலைகள் செய்யப்பட்டன. பின் அறைகள் கட்டப்பட்டன.

1970 ஆண்டு காலப்பகுதியில் பேண்ட வாத்தியக்குழு இப்பங்கிலே முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது. மலையகத்தின் முதன் முதலாக பேண்ட் வாதியக்குழு உருவாக்கிய பெருமையும் எமக்கு உண்டு. 1980 பங்கு தந்தையாக வந்த அருட்பணி பொன்னுசாமி. அவர்கள் சேவை காலத்திலும் 1986 பங்கு தந்தை காலத்திலும் 1988 இல் பங்கு தந்தை அருட் திரு ஆபிரகாம் காலத்திலும் ஆன்மீக ரீதியாக பல அபிவிருத்திகள் காணப்பட்டன. 2003 ஆண்டு காலப்பகுதியல் அருட் தந்தை அருட்திரு நியூமன் பீரீஸ் அவர்கள் எமது பங்கிற்கு சேவையாற்றி வந்த காலப்பகுதியில் பல்வேறு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன. அவர் காலத்தில் பழைய கோயில் கமிட்டியை களைத்து புதிய கோயில் கமிட்டியை அமைத்ததோடு கோயில் தலைவராக திரு பெர்ணாண்டோ அவர்களை நியமித்ததோடு எமது ஆலயத்தின் திருதூயகத்திற்கு பளிங்கு கல் பதிக்கப்பட்டதோடு, கோவில் தரையும் புனரமைப்பு செய்யப்பட்டது. ஆலயத்திற்கு வெளியே கிரில் கொண்டு வேலி அமைத்து, கேட் போடப்பட்டதும். இவர் காலத்தில்தான். மேலும் அவரை தொடர்ந்து எமது பங்கிற்கு சேவையாற்ற வந்த அருட்தந்தை சாள்ஸ் மரியதாஸ் அவர்கள் காலத்திலும் பல்வேறு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன.

இவர் காலத்தில் தேவஅன்னையின் கெபி கட்டப்பட்டதோடு, மின்சாரம் வயர்கள் புதுப்பிக்கப்பட்டதோடு, நற்கருணை பேழையும் புதிதாக பதிக்கப்பட்டது. இவருக்கு பின்னர் சேவையாற்ற வருகை. தந்த அருட் தந்தை கிறிஸ்டி போல் அடிகளார் காலத்தில் பக்தி சபைகள் நன்றாக வளர்க்கப்பட்டு வருகின்றது. திரு.பாலத்துவ சபை, மரியாயின் சேனை, பெண்கள் ஒன்றியம் திருவழிப்பாட்டு குழு மாணவர் ஒன்றியம், யோசேவாஸ் இல்ல சந்திப்புகுழு என்பனவும் வளர்க்கப்பட்டு வருகின்றன. இவர் காலத்தில் புனித அந்தோனியார் சுரூபபீடம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் மகாஊவா தோட்ட மக்களின் ஆன்மீக வளர்ச்சி திரு குடும்ப கன்னியர்மட அருட் சகோதர்களின் பங்களிப்பை மறந்துவிட முடியாது. வலப்பனை கன்னியர் மட அருட் சகோதரிகளும் ஆன்மீக பணியை செய்து வருகின்றனர். மேலும் அருட்தந்தை கிறிஸ்டி போல் அடிகளின் காலத்தில் பழைய ஆலய நிர்வாகக்குழு கலைக்கப்பட்டு புதிய நிர்வாக குழு அமைக்கப்பட்டது. கோயில் தலைவராக திரு Y.அருள்சாமி நியமிக்கப்பட்டதோடு அதனை தொடர்ந்து திரு. A.திவ்விய நாதன் அவர்களும் தலைவராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இராகலை பங்கு வளர்ச்சியில் மகாஊவா புனித அந்தோனியார் ஆலயமானது. தங்களுடைய முழுமையான பங்களிப்பை வழங்கி மக்களின் ஆன்மீக வளர்ச்சியில் கொண்டுள்ள ஈடுபாட்டை எண்பிக்கின்றது என்பதில் ஐயமில்லை.

தே.ஜோபோல்
மஹா ஊவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தகால நினைவுகள்

வசந்த கால நினைவுகள் இயற்கை கொஞ்சி உலா விடும் வற்றாத வளம் நிறை வானமிகு எழில் மிகு இராகலை நகரின் குன்றின் சிகரமாய் பரிசுத்த ஜெபமாலை மாதா ஆலயம் திகழ்கிறது. அண்டியோரை அஞ்சேல் என இரு கரத்தால் அரவணைத்து அருள் மழை பொழிந்து காப்பாற்றி வருகின்றார் அன்னை மரியாள். சந்தன மாதா என்றும் பிற மதத்தவர்களால் போற்றப்பட்டு சந்தன மணம் பரப்பி சமாதானம் தருகிறார் சமாதானத்தின் இராக்கினி தேவமாதா.

அண்மையில் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட இருக்கும் இவ் ஆலயம் பழைய நிலை மாற்றப்பட்டு புது ஆலயம் புது பொழிவுடன் புத்தொளி வீச நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதன் பெருமையை எடுத்து இயம்புவதிலும் பெருமிதம் எய்துகின்றேன்.

1916ம் ஆண்டு தை மாதம் 14ஆம் திகதி இராகலையில் செபமாலை அன்னைக்கோர் ஆலயம் அமைத்துக் கொடுத்தார். மரியஜோசப் கார்வாலோ என்னும் உத்தமன். மரியஜோசப் கார்வாலோ இவர் 1865 ஆம் ஆண்டு ஆனிமாதம் 25ஆம் திகதி ஜனனமாகி இப்பங்கிலே 1938ஆம் ஆண்டு ஆடி மாதம் 17ஆம் திகதி மரணமானார். இப் பங்கில் பல காலம் வாழ்ந்து மக்களிடையே அரிய தொண்டாற்றினார். இவர் வாழ்வு தன்னவர் அன்னியர் என்ற பாகுபாடின்றி அமைந்தது. இவற்றின் காரணமாய் பரிசுத்த பாப்பரசர் "திருச்சபையின் உத்தமன்" என்று விளங்கும் பட்டமுள்ள வெகுமானப் பதக்கத்தை அவருக்கு அன்பளிப்பு செய்தார்.

அன்னையின் ஆலயம் நாளடைவில் மிகவும் பிரபல்யமானது. ஆயிரக்கணக்கான மக்கள் அவள் பாதம் நாடி வந்தனர். எனவே இவ்வூரில் பணிபுரிய வண.குணதிலக்க பிதா அனுப்பப்பட்டு பணியாற்றினார். 1952 ஆம் ஆண்டில் வண.பிதா விக்டர் ராஜநாயகம் O.S.B.ஆயர் அவர்களால் இதுவரை காலமும் நுவரெலியா பங்கின் கீழ் இயங்கிய இவ் ஆலயம் தனிப்பங்காக மிளிரத் தொடங்கியது. 1953 ஆம் ஆண்டு கடைசியில் வண.பிதா பரீனா O.S.B. அவர்கள் பங்கு குருவாக வந்தார் அவருக்குப் பின் வண பிதா சூசைப்பிள்ளை பொறுப்பேற்றார்.

ஆரம்பத்தில் கடமையாற்றிய இவர்கள் வயதில் மூத்தவர்களாக இருந்ததாலும் பல்வேறு சிரமங்கள் மத்தியில் சேவையாற்றியவர்களாக இருந்துள்ளனர். பிதா ராஜநாயகம் ஆஸ்மா நோயினால் வதைப்பட்ட போது அதற்கான மருந்தை திருப்பலி நேரத்தில் பாவித்துக் கொண்டே பணியாற்றியிருந்தமையை கேள்விப்பட்டுள்ளோம்.

1953ஆம் ஆண்டு கடைசியில் பொறுப்பேற்ற வண பிதா பரீனா அவர்கள் காலத்திலேயே முதன் முதலாக கத்தோலிக்க சேவா சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. 1955 இல் பங்கு குருவான வண.பிதா சூசை பிள்ளை காலத்தில் ஆலயம் புதுப்பொழிவுப் பெற்றது. இப்பங்கின் ஆவினம் உள்ளதை மீட்டு அசைப்போடுவது போல் நானும் கடந்த கால சுவடுகளை மீள எண்ணிப் பார்க்கின்றேன்.

பிதா சூசைப்பிள்ளை காலத்திலேயே பளிங்கு கற்களால் பலிபீடம் அமைக்கப்பட்டது. 1961இல் திருமுழுக்குத் தொட்டில் அமைக்கப்பட்டது. அன்னையை நாடி வந்தவர்களால் ஆலயம் நிறைந்தது. போதிய இடமின்மையால் பக்கக் கோயில்கள் இருபுறமும் விஸ்தரிக்கப்பட்டது. இவரின் சேவை பொற்காலமாக திகழ்ந்தது.

கத்தோலிக்க சேவா சங்கம் புத்துணர்ச்சி பெற்றது. ஆன்மீகத்துறையில் மட்டுமன்றி ஏனைய துறையிலும் அக்கறையை காட்டியது. போக்குவரத்து வசதியற்ற அக்காலத்தில் வோல்டிமார், அரஸ்பெத்த போன்ற தூர இடங்களில் இருந்தும் மரித்தோர் அடக்கம் செய்ய இராகலைக்கு கொண்டு வருவதில் சிரமம் உணர்ந்து இதற்கென தனியாக ஒரு வண்டி இவர்களால் உருவாக்கப்பட்டது. அப்போது இச்செயல் பிற மதத்தவர்களால் பாராட்டப்பட்டது.

வருடம் தோறும் ஐப்பசி மாதத்தில் சாதி இன மத பேதமின்றி அன்னைக்கு விழா எடுக்கும் நிலை கண்டு வியக்கிறேன். ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் திருவிழா முதல் நாள் நற்கருணை ஆராதனை நடைபெறுவதுடன் பல தோட்டங்களுக்கு அன்னை ஏந்திய பல சப்பரங்கள் கோயிலை நாடி வருவதும் வான வேடிக்கை நிகழ்வும் கண் கொள்ளா காட்சியாக இருந்தது.

இப்பிரதேசத்தை அண்டியவர்கள் மட்டுமன்றி தூர இடங்களில் இருந்தும் யாத்திரிகள் வந்து கூடாரம் அமைத்து தங்கி அன்னையின் அருளை பெற்ற நிலையும் இருந்தது. அப்போது திருப்பலி சிங்களம், ஆங்கிலம், தமிழ் மொழிகளிலும் நடத்தப்பட்டது. 03.07.1961 பியோபவுலின் என்னும் இத்தாலி நாட்டு குருவானவர் பங்குத்தந்தையாக பொறுப்பேற்றார். சிறு பிள்ளைகள் மீது மிகுந்த பாசமும் கல்வி போன்ற விடயங்களில் அக்கறையும் காட்டினார். இராகலை தமிழ் மகா வித்தியாலய நுழைவாயில் அருகில் பிரம்போடு இருந்து மறைக்கல்விக்கு அழைத்துச் செல்வார். பியஸ், அப்பிள் தோட்டத்தை விரிவுப்படுத்தி காய்க்கும் கனிகளை பூசை முடிந்த பின் பிதாவைப் போல் எல்லோருக்கும் பகிர்ந்திடுவார்.

1965 ஆம் ஆண்டு பங்குனி மாதம் வண பிதா ஜஸ்டஸ் சின்னப்பு அவர்கள் பங்கு குருவாக கடமையாற்றினார். இவருடைய காலத்தில் 50ஆம் ஆண்டு பொன்விழா கொண்டாடப்பட்டது. நினைவு மலரும் இவரால் வெளியிடப்பட்டது. கோயில் முற்றம் சரிவாக இருந்த நிலையில் சொரூபம் வைக்கப்பட்டது. இன்று இதே சொரூபம் காணப்படுகிறது. இதே நிலை மகாஊவா ஆலயத்திலும் ஏற்படுத்தப்பட்டது. தற்போதைய இராகலை மத்திய கல்லூரிக்கும் இவ் ஆலயத்திற்கும் நெருங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு உள்ளது. அன்று ஆரம்பத்தில் முதன் முதலாக இப்பாடசாலை தற்போதைய பங்குதந்தையின் பணிமனை உள்ள கட்டிடத்திலேயே இயங்கியது. இந்நிலை தொடரும் என நினைத்து, பங்குத்தந்தை அவர்களால் எடுத்த நடவடிக்கை காரணமாக அரசாங்க பாடசாலை இடம் மாற்றப்பட்டது. இக்கட்டிடத்தில் கத்தோலிக்க பிள்ளைகளுக்கென கத்தோலிக்க பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலை அப்போது ஆசானாக கடமையாற்றிய திரு.ஏ.ஞானப்பிள்ளை அவர்கள் எம்மோடு வாழ்கிறார். அவர் ஆற்றிய சேவைக்காக அவருக்கு இறை ஆசி வேண்டுகிறேன்.

பல்வேறு செயல்திட்டங்களுக்காக நிதி போதா வேளையில் தபால் திணைக்களத்தில் கடமையாற்றிய எஸ்.அருளானந்தம் அவர்களின் தலைமையில் கலை நிகழ்வுகள் இக்கட்டிடத்தில் நடத்தப்பட்டு நிதி சேகரிக்கப்பட்டது.

கத்தோலிக்க பிள்ளைகளுக்கென்று ஆரம்பித்த பாடசாலை பல்வேறு காரணத்தினால் தொடர்ந்து இயங்க முடியாத நிலையில் இக் கட்டிடத்தில் முதன் முதலாக 03.07.1961 திருக்குடும்ப கன்னியர் மடம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் வென்னப்புவ சகோதரிகளும் பின்னர் யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, மறை மாவட்டத்தைச் சேர்ந்த சகோதரிகள் சேவையாற்றினர். இவர்கள் ஆற்றிய பணிகள் அளப்பரியது. நெஞ்சை விட்டு நீங்கா நினைவலைகள். தோட்டப்புறங்களுக்குச் சென்று கத்தோலிக்க மக்களுக்கு மட்டுமன்றி ஏனைய மத மக்களையும் அன்போடு அரவணைத்ததால் அம்மா என்று ஆசையுடன் அழைப்பர். அவர்கள் ஆலய செயற்பாடுகளுடன் மட்டுமன்றி பொதுமக்களின் வாழ்வுக்கும் வழிகாட்டியாய் வாழ்ந்தனர். கல்வித் துறைக்காக இப்பகுதியில் மும்மொழியும் கற்பிக்க முன்பள்ளி நடத்தினர். இவர்கள் தொடங்கிய பணி புதிய ஆலயம் அமைக்கும் வரை இங்குள்ளவர்களால் தொடரப்பட்டது. திருக்குடும்ப சகோதரிகள் ஆற்றிய சேவைகள் அன்பு பராமரிப்பு காலத்தால் அழியாதவை இறை ஆசி இவர்களுக்கு நிறைவாய் பொழியட்டும்.

மரியாயின் சேனை இளைஞர்களின் இராக்கினி மரியாயின் சேனை சேவா சங்கம் இளந் தொழிலாளர் இயக்கம் (C.Y.O) என்பன அமைக்கப்பட்டன. இளந் தொழிலாளர்கள் இயக்க கீதமான இளந் தொழிலாளர்கள் வர்க்கத்தை தட்டி எழுப்பினார். இவரின் எளிமையான செயற்பாடுகளும் தத்துவமிக்க உரைகளும் மக்களைக் கவர்ந்தன. உலகம் அறியாத சிறுவர்களை கண்டி கொழும்பு போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்று பல புது விடயங்களை வெளி உலகில் அறியச் செய்தார். 1966 இல் பங்குத்தந்தையாக வண.பஸ்டியன் அவர்கள் நியமிக்கப்பட்டார். இவர் இப்பிரதேசத்தை நன்கு அறிந்தவராகவும் கண்டி ரிகிலகஸ்கட ஊரைச் சேர்ந்தவராகவும் இருந்தார். இப்பிரதேச பிள்ளைகளின் கல்வியில் அதிக அக்கறை செலுத்தினார்.

